கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அசல் வழக்கு எண்.304/2020

பி.வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **கவிதா** | தொழில் | |
| கணவர் பெயர் | **கிருஷ்ணமூர்த்தி** | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 11.06.2024 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

பி.வா.சா.1.கவிதா தரப்பில் முதல் விசாரணை பிரமாண நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்டது.

நான் வழக்கின் பிரதிவாதி. என் தரப்பில் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் படித்துப்பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன.

1. பி.வா.சா.ஆ.1 – 21.03.2016ஆம் தேதி வாதியும் பிரதிவாதியும் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தம் – கணினி பதிவிறக்க சான்று நகல்
2. பி.வா.சா.ஆ.2 – 25.08.2020ஆம் தேதி வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞருக்கு அனுப்பிய சார்வு நகல்
3. பி.வா.சா.ஆ.3 – 02.09.2020ஆம் தேதி பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பு – உண்மை நகல்
4. பி.வா.சா.ஆ.4 – 04.09.2020ஆம் தேதி வாதியின் வழக்கறிஞர் பதில் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அட்டை – அசல்

5. பி.வா.சா.ஆ.5 –20.08.2020ஆம் தேதி எனது கணவர் கிருஷ்ணமூர்த்தி திண்டுக்கல் சார்பு நீதிமன்றத்தில் நொடிப்பு நிலை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்த IP No. 12/2020 மனுவின் – உண்மை நகல்

(மேற்படி ஆவணம் தாக்கல் செய்தவற்கு வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது வாதி மேற்படி மனுவில் தரப்பினர் இல்லை என்றும் அதனால் மேற்படி ஆவணம் குறியீடு செய்ய முடியாது என்றும் ஆட்சேபனை தெரிவித்தார் மேற்படி ஆட்சேபனைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது)

(பி.வா.சா.ஆ.1 கணினி பதிவிறக்க நகல் ஆகும், ஆனால் அவற்றுக்கு இந்திய சாட்சிய சட்டம் 65(B)(4) சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை)

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை– ஒத்திவைக்கப்படுகிறது.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.11 20:03:22 +0530

Additional District Judge,

Dindigul.